India Media Monitor

# Dina Vanigam

## Survey on sectoral hiring trends in Chennai unveiled

**Date: 28/07/2016 | Edition: Chennai | Page: 6 | Source: Bureau | Clip size (cm): W: 5 H: 5**



# சென்னையில் நிறுவனங்களில் பணிக்கு ஆட்சேர்ப்பது தீவிரமடைந்துள்ளது

**சென்னை, ஜூலை 27**

ஆன்லைன் வழியாக பணிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் கேரியர் தேர்வுகள் இணைய வாசல்களுள் இந்தியாவில் முன்னணி நிறுவனமாகத் திகழும் விஸ்டம்ஜாப்.காம் சென்னையில் வரும் 6 மாதங்களில் நிறுவனங்களின் துறை வாரியான பணிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் வேலை வாய்ப்பு போக்குகள் குறித்த அதன் சர்வே முடிவுகளை வெளியிட்டது. இந்த சர்வே சென்னையில் பல்வேறு துறைகளில் உள்ள 84 நிறுவனங்களை உள்ளடக்கியது. சர்வே முடிவுகளை வெளியிட்டு பேசிய விஸ்டம்ஜாப்.காம் நிறுவனரும் தலைமை செயல் அலுவலருமான அஜய் கோல்லா கடந்த ஆண்டு இறுதியில் நிகழ்ந்த பேரழிவை உண்டாக்கிய மழை வெள்ளத்தின் பாதிப்புகளிலிருந்து சென்னை மீண்டு வருகிற காலக் கட்டத்தில் பல்வேறு துறைகளில் எல்லா நிறுவனங் களிலுமே வேலை வாய்ப்பு அதிகரித்து ஆட்சேர்ப்பு பணிகள் விறுவிறுப்படைந்துள்ளது என்று தெரிவித்தார்.